| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **106/2014** |
| தேதி | : | **07.01.2026** |
| பெயர் | : | கந்தன் த-பெ பழனி |

பி.வா.த.சா.1 (DW1) திரு.**கந்தன் த–பெ பழனி** என்பவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**பி.வா.த.சா.1. (DW1) – குறுக்கு விசாரணை:**

1) வாதி எனக்கு எதிராகவும் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருடைய இடத்தை நானும் மற்ற பிரதிவாதிகளும் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி இவ்வழக்கை நீங்களும் மற்ற பிரதிவாதிகளும் அவருடைய நிலத்தை அபகரிப்பு செய்யததாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

2) இவ்வழக்கில் நான் 5ம் பிரதிவாதியாவேன். இவ்வழக்கை நான் மட்டும் தான் நடத்துகிறேன். மற்ற பிரதிவாதிகளை பற்றி எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கை பணம் பரிக்கும் நோக்கத்தோடு தான் நடத்துகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நானும் தோன்றாதரப்பினராக மாறி மூன்று வருடங்கள் கழித்து தான் வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரிதான்.

3) நானும் மற்ற பிரதிவாதிகளும் இணைந்து வாதியின் நிலத்தை அபகரித்தது மட்டும் இல்லாமல் அவருக்கு இழப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு செயல்பட்டுவருகிறேன் என்றால் சரியல்ல. என் மீதும் மற்ற பிரதிவாதிகள் மீதும் வாதி காஞ்சிபுரம் மாட்ட துயை கண்காணிப்பாளரிடம் நிலஅபகரிப்பு சம்பந்தமாக புகார் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த புகார் மீது 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து அவர்களை கைது செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது.

4) என்னையும் கைது செய்துவிடுவார்கள் என்ற அச்சத்தால் தான் நான் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டேன் என்றாலும் அந்த அச்சம் போனபின்னர் நான் இவ்வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி முதல் 3ம் பிரதிவாதி வரை இணைந்து 4ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் அளித்துள்ளார்கள்

என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதியானவர் 4ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையப்பத்திரம் தான் வாதசாஆ 1 ஆகும். அது பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. இந்த விவரங்கள் பற்றி என்னுடைய எதிர் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

5) இவ்வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை வாதிக்கு சாதகமாக இந்நீதிமன்றம் வழங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இடைக்கால உறுத்துக்கட்டளை பற்றிய விவரங்கள் என்னுடைய எதிர் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் A பட்டியல் இடப்பட்ட தாவா சொத்தில் இருந்து உருவாக்கப்பட்ட B, C, D தாவா சொத்துக்கள் கிரையங்களை இரத்து செய்வதற்கான இடைக்கா உறுத்துக்கட்டளை வாதி பெற்றுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்விவரம் அனைத்தும் எனக்கும் தெரியும் நான் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டு கோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கையொப்பம் Sd/. கந்தன்.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.